2025 ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 126 /2021

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW3 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW3 – பன்னீர்செல்வம் |
| தகப்பனார் பெயர்: | வேலுச்சாமி |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | முதுநிலை உதவியாளர், New India Assurance, Madurai |
| வயது : | 50 |

தேதி : 19.08.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சி ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 15.09.2023ம் தேதியிட்டு தேனி தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், MCOP.125/2021–ல் பிறப்பித்த உத்தரவின் நீதிமன்ற சான்றிட்ட நகல் – **எ.ம.சா.ஆ.4** |
| 2. | விபத்தில் சம்பந்தப்பட்ட பதிவு எண் இல்லாத Engine No.4H 3306152O273 மற்றும் Chasis No.ARGO42015073020 என்ற வாகனத்தின் பாலிசி நகல் நிபந்தனையுடன் கூடியது – **எ.ம.சா.ஆ.5.** |

மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

விபத்தில் சம்பந்தப்பட்ட மேற்படி வாகனத்திற்கு சேலம் மாவட்டம், ஓமலூர் கிளையில் உள்ள இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து தான் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாலிசியில் குறிப்பிட்டுள்ள TN 30 என்பது சேலம் மாவட்டத்தை குறிக்கும் என்றால் சரிதான், ஆனால் பாலிசிதாரர் வாகனத்தின் பதிவு எண்ணை கொடுக்காததால் சேலம் மாவட்டம் எனக் காட்டுவதற்காக TN 30 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என சேலம் ஏற்காடு காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது ஏன்றால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் முழுக் காரணம் என்று தெரிவித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 3வது பாராவில் மிக்சர் கலவை இயந்திரத்தில் ஓட்டுநர் மட்டுமே பயணம் செய்ய முடியும் என்று சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாலிசி நகலை தாக்கல் செய்துள்ளேன், பாலிசியில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வண்டியில் ஓட்டுநர் இருக்கைக்கு இரண்டுப் பக்கங்களிலும் இருக்கைகள் உள்ளன என்றும், அதில் ஓட்டுநர் உட்பட நான்கு நபர்கள் பயணம் செய்யலாம் என்றால் சரியல்ல, அவ்வாறு பயணம் செய்தால் பாலிசி விதிமீறல் ஆகும். அந்த வாகனத்தை எங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யும்போது புதிய வாகனம் என்றால்

சரியல்ல. மேற்படி வாகனம் காப்பீடு செய்யப்பட்ட பிறகு permit பெறாமல் சாலையில் ஓட்டினால் இன்சூரன்ஸ் கம்பெனி பொறுப்பல்ல என்று தெரிவித்து, எச்சரிக்கை அறிவிப்பு எதுவும் நாளது தேதிவரை சம்பந்தப்பட்ட நபருக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அறிவிப்பு அனுப்பப்படவில்லை ஆனால் பாலிசி வழங்கப்பட்டதே மோட்டார் வாகன சட்டவிதிகளுக்கு உட்பட்டு தான் வழங்கப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் 5 வது பாராவில் ஞாயிற்றுக்கிழமை பணிக்காக வாகனத்தை பயன்படுத்தினார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் 6 வது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள MCOP.No.125/2021 வழக்கு குறித்த விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது, கோப்புகளின் அடிப்படையில் தெரியும். மேற்படி MCOP.No.125/2021 மனுவில் தேனி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்மேல் அம்மனுவின் மனுதாரர் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மேல்முறையீடு செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.5 பாலிசியில் ஓட்டுநர் உட்பட ஆட்கள் அமர்ந்து செல்லலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதில் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, அது ஓட்டுநரை குறிக்கும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் வாகனத்திற்கு பாலிசி இருப்பதாகவும், விபத்து சமயத்தில் ஊர்ஜிதத்தில் இருந்ததாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, பாலிசி இருப்பதால் அந்த விபரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. எனது மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மை தன்மைகளை மறைத்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனக்கு சாதகமான விபரங்களை மட்டும் தெரிவித்து வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபருக்கும், காயம்பட்ட நபருக்கும் விபத்து சமயத்தில்

வாகனத்தின் காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்ததால் எங்கள் நிறுவனமே இழப்பீட்டுத் தொகை வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாகனம் காப்பீடு செய்யப்பட்ட சேலம், ஓமலூர் கிளையிலிருந்து நிறுவனம் சம்பந்தமாக யாரும் சாட்சியம் அளிக்காமல் மதுரையில் உள்ள நிறுவனத்திலிருந்து வந்து சாட்சியம் தவறு என்றால் சரியல்ல. அதேபோன்று, தேனி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற MCOP.No.125/2021 வழக்கில் சேலம் மாவட்டம், ஓமலூர் கிளை நிறுவனத்திலிருந்து அதிகாரி எ.ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சேலம் மாவட்டம், ஓமலூர் கிளை இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து சாட்சியம் அளிக்க வந்தால் மேற்படி வாகனம் குறித்த உண்மைகள் தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் அதை தவிர்க்க வேண்டி மதுரையிலிருந்து நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.19 18:30:44 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC). தேனி.
19.08.2025